# கிரய அச்சார உடன்படிக்கைப் பத்திரம்

2023—ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் நாள்: (17-05-2023)

புதுச்சேரி—605110, வில்லியனூர், வெள்ளாழர் வீதி, 23.ஆம் எண் கொண்ட இல்லத்தில் வசிக்கும் திரு. சுப்ரமணியன்பிள்ளை அவர்களின் குமாரர் திரு. **S. பெருமாள் ராஜா** — 1-வது பார்ட்டி:

புதுச்சேரி, வில்லியனூர் கொம்யூன், ஒதியம்பட்டு, வில்லியனூர் மெயின் ரோடு, 08.ஆம் எண் கொண்ட இல்லத்தில் வசிக்கும் காலஞ்சென்ற கலிவரதன் அவர்களின் குமாரர் திரு. **C. கார்த்திகேயன்** 2—வது பார்ட்டி:

ஆக 1, 2 பார்ட்டிகளாகிய சேர்ந்து எழுதிக்கொண்ட கிரய அச்சார உடன்படிக்கை பத்திரமாவது:

இதனடியில் கண்டுவிவரிக்கப்படும் சொத்தானது 1—வது நபருக்குச் சொந்தமானதும், அவருடைய அனுபவத்தில் இருந்து வருவதுமான இதனடியில் சொத்து விபரத்தில் குறிப்பிடும் சொத்தை 2—வது நபர் விலைக்கு கேட்டு அதற்கு 1—வது நபர் சம்மதித்து 1, 2—நபர்களுக்குள் கிரயம் பேசி தீர்த்துக்கொண்டு இதற்காக இன்று தேதியில் 2—வது பார்ட்டியிடமிருந்து 1—வது பார்ட்டி முன்பணமாக பெற்றுக் கொண்ட தொகை ரூபாய். ரூபாய். 10,000/- (ரூபாய். பத்தாயிரம் மட்டும்). மிகுதி பாக்கித் தொகையை இன்று முதல் 1.(ஒரு) மாத கெடுவிற்குள் 1—வது நபர் சொத்திற்குண்டான மூலப்பத்திரம், வில்லங்கம், அளவு போன்றவைகளையும், 2—வது நபர் வசம் கொடுத்து தான் பெற்றுள்ள முன்பணம் போக மீதி கிரயத்தொகையை 2—வது நபரிடமிருந்து பெற்றுக்கொண்டு 2—வது நபரால் எழுதப்படும் பத்திரத்தை பதிவு செய்துக்கொடுக்க 1—வது நபர் சம்மதிக்கிறார்

இதுநாள்வரை கீழ்கண்ட சொத்தில் வில்லங்கம் ஏதும் இல்லை. இனிமேலும் கீழ்கண்ட சொத்தில் வில்லங்கம் ஏதும் ஏற்படுத்தமாட்டேன் என்று 1—வது பார்ட்டி உறுதிகூறுகிறார். மேற்படி கெடுவிற்குள் 2—வது பார்ட்டி கிரயம் செய்துக்கொள்ள தயாராய் இருந்து 1—வது பார்ட்டி கிரயம் செய்து கொடுக்க தவறினால் மீதி கிரயத்தொகையை கோர்ட்டில் செலுத்தி "ஸ்பெசிபிக் பெர்பாமான்ஸ் ரிலிப் ஆக்டின்" படி கட்டாய பதிவு செய்துகொள்ள 1—பார்ட்டி சம்மதிக்கிறார்.

மேலே கண்ட விதிமுறைகளிலிருந்து 1, 2 பார்ட்டிகள் தவறுவதில்லை என உறுதிகூறி கீழ்கண்ட சாட்சிகளறிய எழுதிக்கொண்ட கிரய அச்சார உடண்படிக்கை.

1—வது பார்ட்டி 2—வது பார்ட்டி

## சொத்து விபரம்

புதுச்சேரி ரி.டி. வில்லியனூர் சப். ரி.டி. வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராம நெ. 32, வில்லியனூர் வருவாய் கிராமம், **ரீசர்வே நெ. 90/5.** கதாஸ்தர் நெ. 229.க்கு அடங்கிய விஸ்தீரணத்தில் " **ஸ்ரீ மஹா கல்யாணி நகர் விரிவு** " என்ற பெயரில் மனைகளாகப்பிரிக்கப்பட்டதில் உங்கள் பெயருக்கு கிரயம் கொடுப்பது **மனை நெ. 1.** மட்டும். இதன் மொத்த அளவு **787**சதுரஅடி அளவுள்ள காலிமனை மட்டும். இதற்கு ஜக்குப்பந்தி: 2.ஆம் எண் கொண்ட மனைக்கு (கிழக்கு) ஸ்ரீ மஹா கல்யாணி நகர் 61.ஆம் எண் கொண்ட மனைக்கு (மேற்கு) புதியதாக விடப்பட்ட முதல் மெயின் ரோட்டிற்கு (வடக்கு) ரீசர்வே எண்.90/1 இடத்திற்கு (தெற்கு) இதற்குட்பட்டது.

1–வது பார்ட்டி 2–வது பார்ட்டி

சாட்சிகள்:

1)

2)